**DEPSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARANTHANGI**

**Calendar**

**Miscellaneous**

**Preliminary Register** CC.No.73/2018

**Sessions**

| | | |
|---|---|---|
| **Deposition of witness for** | PW 2 | **Caste** |
| **NAME** | ஜெகநாதன் | **Calling** |
| **Father's Name** | செல்வராஜ் | **Religion** |
| **Village** | | **Age** |
| **Taluk** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1973 of the day of 27-04-2021

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் ஆலங்குடி தாலுகா புதுக்கோட்டை விடுதி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் சென்னையில் பழக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கின் வாதி சைனீகுரூசையும் எதிரி இறைவன் ஏஜென்சீஸ்சையும் எனக்குத் தெரியும். எதிரி சண்முகப்பிரியா இறைவன் ஏஜென்சீஸ் என்ற பெயரில் அறந்தாங்கி கட்டுமாவடி முக்க சாலையில் Air tel DTH சர்வீஸ் தொழில் 2014 முதல் 2016 வரை நடத்தி வந்தார். நான் எதிரியின் நிறுவனத்தில் 2014 முதல் 2016 வரை சேல்ஸ்மேனாக வேலை பார்த்தேன். எதிரியை அவரது நிறுவனத்தில் வேலை பார்த்த போது தான் எனக்குத் தெரியும். நான் வேலை பார்த்த சமயத்தில் எதிரி சைனீகுரூஸ் நிறுவனத்திடம் 2014 – 2016 வருட த்தில் ரூபாய் 1,00,000/- ம் அவரது தொழிலுக்காக கடன் வாங்கினார். அந்த விபரம் நான் எதிரியின் கடையில் வேலை பார்த்த வகையில் எனக்குத் தெரியும். எதிரி சைனீகுரூசியிடம் இருந்து வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்க மூன்று வருட காலம் வரை காலதாமதம் ஆனது. எதிரி சைனீகுரூப்சியிடம் வாங்கிய கடனுக்கு புரோநோட் மற்றும் காசோலை கொடுத்தார். சைனீகுரூஸ் நிறுவனத்திலிருந்து புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளரும் புகார் கொடுக்கப்பட்டது. அதன் பேரில் அறந்தாங்கி காவல் நிலையத்தில் நானும் எதிரி சண்முகப்பிரியாவும் சைனிகுரூஸ் தரப்பில் சைனீகுருஸ் மற்றும் அவரது கணவர் குமரேசனும் வந்தார்கள்., அந்த விசாரணையில் 1,00,000/- எதிரி வாங்கியதாகச் சொல்லி சைனீகுருஸ் யிடம் 50,000/- ரொக்கமாகவும் ரூபாய் 48,000/- சைனிகுரூஸ் வங்கியின் கணவர் குமரேசன் வங்கியிலும் எதிரி சண்முகப்பிரியா செலுத்தினார். அதன் பின்பு போலிசார் விசாரணைக்கு கூப்பிடவில்லை. காவல் நிலையத்தில் விசாரணையில் சைனிகுரூஸ் தரப்பில் எதிரியிடம் வாங்கியிருந்த புரோநோட்டையும் காசோலையும் கொடுக்கவில்லை. எதிரி

சண்முகப்பிரியா வாதி சைனிகுரூஸ் இடம் கடன் எதுவும் வாங்கவில்லை. எதிரிக்கும் வாதிக்கும் உள்ள பணப்போக்குவரத்து பற்றிய விபரம் நான் எதிரியின் கடையில் வேலை பார்த்த வகையில் எனக்குத் தெரியும். இறைவன் ஏஜென்ஸீஸ் நிறுவனம் தற்போது நடக்கவில்லை 2016 ஆம் வருடம் மூடப்பட்டு விட்டது.

குறுக்கு விசாரணை

நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பானை எதுவும் வரவில்லையென்று சொன்னால் சரிதான். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எதிரி சண்முகப்பிரியா தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். எதிரியின் நிறுவனத்தில் வேலை பார்த்தற்கு எவ்வளவு மாத சம்பளம் பெற்றேன் என்றால் 9,000/- சம்பளம் வாங்கினேன். அவ்வாறு எதிரியிடம் சம்பளம் வாங்கியதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் ெ சய்ய இயலுமா என்றால் சம்பளம் கையில் தான் வாங்குவேன் ஆவணங்கள் இல்லை. எத்தனை மாதம் வேலை பார்த்தேன் என்றால் 2 வருடம் வேலை பார்த்தேன். எதிரியின் கடை யிலிருந்து வேலையில் நின்ற பின்பு எங்கு வேலை பார்த்தேன் என்றால் இரண்டு வருடம் கன்ரெக்டராக வேலை பார்த்தேன். பின்பு 2018 ஆம் வருடம் சென்னை சென்று விட்டேன். தற்போது வரை சென்னையில் பழக்கடை தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். 2016 ஆம் வருடம் எதிரி கடையிலிருந்து வேலையை விட்டு சென்ற பின்பும் எதிரி கடைக்கு அடிக்கடி சென்று வருவேன் என்றால் சரிதான். எதிரியின் வியாபார நடவடிக்கைகள் எனக்குத் தெரியும் என்பதால் அவ்வாறு வேலையை விட்டு நின்ற பின்பும் எதிரியின் கடைக்குச் சென்று வந்தேன் என்றால் சரிதான். 2014 முதல் 2016 வரை மட்டும் தான் எதிரியின் இறைவன் ஏஜென்சீஸ் நிறுவனம் நடந்தது என பொய்யாக சொல்லுகிறேன் என சொன்னால் சரியல்ல. 2018 ஆம் வருடம் எந்த மாதத்தில் நான் சென்னை சென்றேன் என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. 2018 ஆம் வருடம் நான் சென்னைக்குச் சென்று விட்டதால் 2018 ஆம் வருடத்தில் எதிரிக்கும் வாதிக்கும் என்ன வரவு செலவு நடந்தது என்று எனக்குத் தெரியாது என்று சொன்னால் நான் வேலை பார்த்த வரை உள்ள காலங்களில் உள்ள வரவு செலவு மட்டும் தெரியும். 2014 ஆம் வருடத்தில் வாதி எதிரியிடம் 1,00,000/- கடனாக கொடுத்தாகச் சொல்வதை எனது முன்னிலையில் தான் கடன் கொடுக்கப்பட்டது என்றால் என் முன்னால் தான் கடன் கொடுக்கப்பட்டது. அந்தக் கடனை எந்த தேதியில் எங்கு வைத்து எதிரி வாங்கினார் என்று எனக்குத் தெரியுமா என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொல்லும் ரூபாய் 1,00,000/-ம் கடனை எதிரி வாங்கவில்லையென்பதால் தான் எந்த தேதியில் எங்கு வைத்து கடன் கொடுக்கப்பட்டது என்று எனக்குத் தெரியவில்லையென்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி தரப்பில் வாதி சைனிகுரூஸ் இடம் 98,000/- ரூபாய் திருப்பிச் செலுத்தவில்லையென்று சொன்னால் சரியல்ல. நான் வாதி தரப்பில் எதிரியின் காசோலை மற்றும் புரோநோட்டை திருப்பி தரவில்லையென்று சொல்வதற்கு எதிரி தரப்பில் அவற்றை கேட்டு காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்துள்ளார்களா என்றால் புகார் கொடுக்கவில்லை. அவ்வாறு நான் சொல்லும் 1,00,000/- ம் கடனுக்கு எதிரி காசோலையும் புரோநோட்டும் கொடுக்காததால் தான் எதிரி அதை கேட்டு புகார் கொடுக்கவில்லையென்று சொன்னால்

சரியல்ல. கடந்த 9-03-2018 அன்று வாதியின் வீட்டில் வைத்து எதிரி இறைவன் ஏஜென்ஸீஸ் உரிமையாளர் என்ற பேரில் ரூபாய் 8,70,000/- ம் தொழில் தேவைக்காக கடனாக பெற்றுக் கொண்டு அதற்காக வா.சா.ஆ .1. காசோலையை கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தும் விதமாக எதிரி வாதிக்கு காசோலை கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரியிடம் சம்பளத்திற்கு வேலை பார்த்தால் அவர் கேட்டுக் கொண்டதற்கு இனங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இறைவன் ஏஜென்ஸ்ஸீஸ் கட்டுமாவடி முக்கத்தில் இயங்கியதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. இறைவன் ஏ ஜென்ஸீஸ் 2014 முதல் 2016 வரை மட்டும் தான் இயங்கியது என பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எதிரியை வழக்கிலிருந்து தப்பிக்க வைக்க எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.